# நூறு ஆண்டுகளை நிறைவுசெய்யும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு

## 1. அறிமுகம்

**அரசாங்க கணக்குகள் பற்றிய குழு**

இலங்கையில், அரசாங்க கணக்குகள் பற்றிய குழு என்பது பாராளுமன்ற அரசாங்க முறைமயைக் கொணட் வெஸ்ற்மின்ஸ்டர் மாதிரி நடைமுறையை தழுவிய ஒரு குழுவாகும். இது இலங்கைப் பாராளுமன்றத்தில் அதிபழமை மற்றும் மிகமுக்கியத்துவம் வாய்ந்ததான நிதி மேற்பார்வைக் குழுவாகும். மக்களின் பிரதிநிதிகளாக அரசாங்க நிதிக்கு வகைப்பொறுப்புக் கூறுவதை உறுதிசெய்வதில் சம்பந்தப்பட்ட பாராளுமன்றங்களுக்கு உதவியளிப்பதற்கு மேற்பார்வைக் குழு என்ற ரீதியில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு முக்கியமான பங்களிப்பைச் செய்கிறது. அரசாங்கக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கான அரசாங்க நிதியின் பாவனையை மேற்பார்வை செய்யும் பணி அதற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

## 2. குழுவின் வரலாறு

1921 ஒக்டோபர் 5 ஆம் திகதி கௌரவ ஈ. ஆர். தம்பிமுத்து அவர்களினால் சட்டவாக்க சபையின் முன்னிலையில் இடப்பட்ட பிரேரணைக்கு பதிலளிக்கும் வகையில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு தாபிக்கப்பட்டது.

பிரேரிக்கப்பட்ட பிரேரணை -

“குறைநிரப்பு மானியங்கள் அடங்கலாக சட்டசபை சமர்ப்பித்த நோக்கங்களுக்கு பிரயோகப்படுத்தியுள்ள ஒவ்வொரு நிதியாண்டுக்குமான சபையின் மானியங்களை உறுதிசெய்வதற்கு சபை வழிமுறைகளை கொண்டிராமையாலும், ஒவ்வொரு வருட இறுதியிலும் செலவழிக்காதுவிடப்பட்டுள்ள ஏதேனும் மீதிகள் தொடரும் வருடச் செலவினங்களை மேற்கொள்வதற்கு கிடைக்கவில்லையென கருதுவதாலும் தொடரும் நிதியாண்டுக்கு, குறிப்பாக 1921 -1 922 ஆம் நிதியாண்டில் அரசாங்க கணக்குகள் பற்றிய நிலையியற் குழு நியமிக்கப்படுதல் வேண்டுமென நான் பிரேரிக்கிறேன்.” (இலங்கை பருவப் பத்திரங்கள், 1922)

அதன்பிரகாரம் 1923 செப்டெம்பர் 5 ஆம் திகதி அரசாங்க கணக்குகள் பற்றிய நிலையியற் குழு நியமிக்கப்பட்டது. அதன் முதலாவது கூட்டம் 1923 ஒக்டோபர் 17ஆம் திகதி நடைபெற்றது. இந்தக் குழுவில் கீழ்காணும் குழு உறுப்பினர்கள் அடங்குகின்றனர்.

தவிசாளர் - இ.ஜே. ஹேவட்
இ.ஆர் தம்பிமுத்து
எப்.ஆர். டயஸ்
ஏ.சி.ஜி. விஜேகோன்

1921 - 1922 ஆம் ஆண்டு காலனித்துவ கணக்காய்வாளரின் அறிக்கைக்கு அது நடவடிக்கை மேற்கொண்டது. இந்த நிலைமை டொனமூர் அரசியலமைப்பின் அறிமுகம் வரை தொடர்ந்ததுடன் அது சில வரையறைகளுடன் இயங்கியது. ஆயினும், குழுவின் கோரிக்கையின்பேரில் காலனித்துவ கணக்காய்வாளர் அனைத்துக் கூட்டங்களுக்கும் சமுகமளித்திருந்தார். 1931 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு கணக்காய்வு அல்லது அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் பங்களிப்பில் அதிகளவு கவனஞ்செலுத்தவில்லை. ஆயினும், அவர்கள் கணக்காய்வின் பொறுப்பு தொடர்பாக கடுமையான மாற்றங்களை சிபாரிசுசெய்தனர். அதற்கிணங்க, முதன்முறையாக கணக்காய்வாளர் தலைமையதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறுபவராக ஆக்கப்பட்டார்.

அதன் பின் 1932 ஜூன் 21 ஆம் திகதி அரசியல் பேரவையில் (State Council) தீர்மானத்தினால் குழு நியமிக்கப்பட்டு அரசாங்க கணக்குகள் பற்றிய நிலையியற் குழுவொன்றினை தாபிப்பதற்கு அரசவையின் சட்டவிதிகளும் கட்டளைகளும் திருத்தப்பட்டன.

பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிதிச்செயலாளரால் ஆலோசனை தெரிவித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், குழுவின் கோரிக்கையின்பேரில் கணக்காய்வாளர் தலைமையதிபதியும் திறைசேரி பிரதிநிதியும் குழுக்கூட்டங்களுக்கு சமுகமளித்திருந்தனர்.

இந்த காலப்பகுதியின்போது எழுந்த முக்கியமான விடயம் யாதெனில், அரசியல் பேரவையில் அரசாங்க கணக்குகள் பற்றிய நிலையியல் குழுவின் அறிக்கையை அரசவை பரிசீலிக்க வேண்டுமென்டும்.

1947 ஆம் ஆண்டு சோல்பரி நிருவாகத்தினுள் நிதி பற்றிய கட்டுப்பாடு பாராளுமன்றத்தில் மதிப்பீடு நிறைவேற்றப்பட்டு பூர்த்தியாகாத நிலையில், ஒதுக்கீட்டுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் ஏதாவது சேவையின் நிமித்தம் அனுமதிக்கப்படும் நிதி உரிய விதத்தில் செலவு செய்யப்பட்டுள்ளதா என பசீலிப்பதன் முக்கியத்துவம் கணக்காய்வாளர் அதிபதியின் விடயப் பரப்பில் வரவேண்டும் என்பது இங்கு எழுப்பப்பட்ட விடயமாகும்.

இலங்கைக்கு அளிக்கப்பட்ட சுதந்திரத்தின் பின், அரசிறை மற்றும் செலவினங்களின் அதிகரிப்பால் முறையான வகைப்பொறுப்பை எய்துவதற்கு மிகவும் கவனமாக நுண்ணாய்வு செய்யப்படவேண்டி ஏற்பட்டது.

1948 ஆம் ஆண்டில் சுதந்திர இலங்கை உருவாகியபோது பாராளுமன்ற **நிலையியற் கட்டளை இலக்கம். 125 இன் கீழ்** முழு முழு அதிகாரம்கொண்ட அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவொன்று தாபிக்கப்பட்டது.

பல ஆண்டுகளாக அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் மீதான வேலைப்பழுவின் அதிகரிப்பினால் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் தொடர்பான அரசாங்க நிதிக்கொள்கை விடயங்களை வேறாக்குவது அவசியப்படுத்தப்படுகின்றது. எனவே, அரசாங்க பொறுப்பு

முயற்சிகள் பற்றிய பிறிதொரு குழுவை தாபிப்பதற்கு 1979 மார்ச் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் 126 ஆம் இலக்க நிலையியற் கட்டளை சட்டவாக்கம் செய்யப்பட்டது. 2018 ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் மற்றும் 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி மற்றும் 2022 நவம்பர் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட திருத்தங்களும் உட்படுத்தப்பட்டு 2022 நவம்பர் 23 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் புதிய நிலையியற் கட்டளைகளின் 119 ஆம் இலக்க நிலையியற் கட்டளையானது அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தாபிதம், தத்துவங்கள் மற்றும் பணிகள் ஆகியன தொடர்பாக ஏற்பாடுகளை செய்கிறது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழு முதலில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 119 மற்றும் நிலையியற் கட்டளைகள் இலக்கம் 134, **135** ஆகியவற்றினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு அதன் மூலம் குழுவின் சரியான செயற்பாடுகளுடன் தொடர்புடைய விடயங்களுக்கான ஏற்பாடுகளை அந்த நிலையியல் கட்டளைகள் ஏற்பாடு செய்கின்றன.

## 3. * அரசாங்க நிதி தொடர்புடைய அரசியலமைப்பு ஏற்பாடுகள்

### அரசியலமைப்பு ஏற்பாடுகள்

இலங்கையில் பாராளுமன்றமானது அரசாங்க நிதி மீது முழுமையாக கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரை கீழே உள்ளவாறு ஏற்பாடு செய்கிறது;

“பாராளுமன்றமானது அரசாங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாடு உடையதாகவிருத்தல் வேண்டும். பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றின் அல்லது அப்போதுள்ள ஏதேனும் சட்டத்தின் அதிகாரத்தினால் அல்லது அதன்கீழ் தவிர, ஏதேனும் உள்ளூரதிகார சபையினால் அல்லது வேறு ஏதேனும்பகிரங்க அதிகார சபையினால் வரி, வீதவரி அல்லது வேறு ஏதேனும் அறவீடு எதுவும் விதிக்கப்படுதல் ஆகாது."

திரட்டுநிதியத்துடன் தொடர்புடைய 149 ஆம் மற்றும் 150 ஆம் இலக்க உறுப்புரைகள் மற்றும் எதிர்பாராச் செலவுநிதியத்துடன் தொடர்புடைய 151ஆம் இலக்க உறுப்புரையும் அரசாங்க நிதி மீது பாராளுமன்றத்தின் பிரத்தியேக கட்டுப்பாட்டைக் காட்டுகிறது.

## 4. அரசாங்க நிதி மீதான பாராளுமன்றத்தின் பிரதான கடமைகள்

பாராளுமன்றம் மூன்று கட்டங்களில் அரசாங்க நிதி மீதான அதன் கட்டுப்பாட்டினைப் பயன்படுத்துகின்றது.

- வருமானம் மற்றும் செலவு மதிப்பீடுகளை மீளாய்வு செய்து அங்கீகரிப்பதன் ஊடாக.
- வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றப்படுவதை மீளாய்வு செய்து கண்காணிப்பதன் ஊடாக
- அரசாங்கம் மற்றும் அதன் நிறுவனங்களின் வகைப்பொறுப்பினை மீளாய்வு செய்து பரீட்சிப்பதன் ஊடாக.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் பாராளுமன்றத்தினால் இரண்டு மட்டங்களில் நிறைவேற்றப்படுகின்றன.

- முழுக் குழு மட்டத்தில்:
- அதன் குழுக்கள் மட்டத்தில்

### குழு மட்டத்தில்

இந்த மட்டத்தில், பாராளுமன்றம் அதன் குழுக்களின் ஊடாக ஆழமாகப் பரிசீலனை செய்வதற்கான சிறப்புரிமையினைக் கொண்டுள்ளது.

அதன் பிரகாரம் அரச நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஒத்துழைத்து நிதி மேற்பார்வை விடயம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் மூலம் பிரதானமாக நிறைவேற்றப்படுகின்றது.

அரசாங்க நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டில் இந்த மேற்பார்வைக் குழுக்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

## 5. அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

- **அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடமைகள்**

அரசாங்கத்தின் செலவுகளைப் பூர்த்திசெய்வதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட தொகைகளின் ஒதுக்கீட்டைக் காட்டுகின்ற கணக்குகளையும் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவ்வாறான ஏனைய கணக்குகளையும் பொருத்தமானதெனக் குழு கருதுகையில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசீலிப்பது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடமையாகும். பரிசீலிக்கப்பட்ட கணக்குகள் பற்றியும் எந்த ஒரு திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபையினதும் நிதிகள், நிதி நடவடிக்கைமுறைகள், செயலாற்றுகை மற்றும் பொதுவாக முகாமைத்துவம் பற்றியும் அவற்றில் இருந்து எழும் ஏதாவது விடயங்கள் பற்றியும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலாம். இந்த அறிக்கையானது, அரச நிதியை முறையாகப் பயன்படுத்துவதை உறுதிசெய்து, அது தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் குறித்த அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளைக் கொண்டிருக்க வேண்டும். - நிலையியற் கட்டளைகள் 119 (2), (3)

- **1923 ஆம் ஆண்டு முதல் 1947 வரையான காலப்பகுதியினுள் கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் பதவியை வகித்துள்ளனர்.**

  - கௌரவ இ.ஜே. ஹேவட்
  - கௌரவ எச்.ஏ. லூஸ்
  - கௌரவ கே.பி. பாலசிங்கம்
  - கௌரவ ஹென்ட்ரி எல். த மெல்
  - கௌரவ பீ.எச். அலுவிகார
  - கௌரவ டட்லிசேனாநாயக்க
  - கௌரவ ஜி.ஜி. பொன்னம்பழம்
  - கௌரவ எச்.டப்ளியூ. அமரசூரிய
  - கௌரவ ஜே. தியாகராஜா

- **1947 ஆம் ஆண்டு முதல் இன்று வரை கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் பதவியை வகித்துள்ளனர்.**

  - கௌரவ கே. கனகரட்னம் – பா.உ. (1947-1950)
  - கௌரவ எல்பெர்ட் எப். பீரிஸ் – பா.உ. (1950-1951)
  - கௌரவ ரொஷலின் கொச் – பா.உ. (1951-1959)
  - கௌரவ ஆர்.எஸ்.வி. கோலியெர் – சி.இ.பீ. பா.உ. (1960-1962)
  - கௌரவ வி.ஏ. கந்தையா – பா.உ. (1962-1963)
  - கௌரவ ஆர்.எஸ்.வி. கோலியெர் – சி.இ.பீ. பா.உ. (963-1964)
  - கௌரவ பேர்னார்ட் சொய்ஷா – பா.உ. (1965-1976)
  - கௌரவ எஸ். தொண்டமான் – பா.உ. (1976-1978 மார்ச்)
  - கௌரவ பி.எஸ். சூசைதாஷன் – பா.உ. (1978 நவர்மபர் – 1983)
  - கௌரவ டப்ளியூ.பி.பீ. திஸாநாயக்க – பா.உ. (1983-1987)
  - கௌரவ பி.வி.எஸ். த சில்வா – பா.உ. (1988)
  - கௌரவ சந்திரகுமார விஜேகுணவர்த்தன – பா.உ. (1989)
  - கௌரவ இ.பி. போல்பெரேரா – பா.உ. (1990-1994)
  - கௌரவ கலாநிதி பி.பீ.ஜி. கலுகல்ல – பா.உ. (1994-1995)
  - கௌரவ கலாநிதி டப்ளியூ.ஏ. விஸ்வாவர்ணபால – பா.உ. (1996-2000 ஆகஸ்ட்)
  - கௌரவ மகிந்தானந்த அளுத்கமகே – பா.உ. (2000 நவம்பர் – 2001 ஜுலை)
  - கௌரவ அனுர பிரியதர்ஷன யாப்பா – பா.உ. (2002 ஜனவரி – 2004 பெப்ருவரி)

- கௌரவ ரவூப் ஹகீம் – பா.உ. (2004 மே – 2008 ஏப்ரல்)
- கௌரவ அனுர பிரியதர்ஷன யாப்பா – பா.உ. (2008 ஜுனி – 2010 ஜனவரி)
- கௌரவ கலாநிதி சரத் அமுனுகம – பா.உ. (2010 மே – 2015 ஜுன்)
- கௌரவ லசந்த அழகியவன்ன – பா.உ. (2015 நவம்பர் – 2020 பெப்ருவரி)
- கௌரவ பேராசிரியர் திஸ்ஸவிதாரண – பா.உ. (2020 செப்தம்பர் – 2022 ஜுலை)
- கௌரவ கபீர் ஹசீம் – பா.உ. (2022 ஒக்டோபர் – 2023 ஜனவரி)
- கௌரவ லசந்த அழகியவன்ன – பா.உ. (2023 பெப்ருவரி முதல்)

குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை

(நிலையியற் கட்டளை 119 (1) – தெரிவுக் குழுவினால் பெயர் குறிக்கப்படும் அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்து அற்ற உறுப்பினர் 16 பேரைக் கொண்டுள்ள அரசாங்க கணக்குகள் பற்றிய குழு என அழைக்கப்படும் ஒரு குழு இருத்தல் இருத்தல் வேண்டும்.

உறுப்பினர்கள் கட்சி விகிதாசாரத்திற்கு அமைவாகத் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்திலும் பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகரினால் அறிவிக்கப்படுகின்றனர்.

கட்சித் தலைவர்களின் வேண்டுகோளுக்கமைவாக தெரிவுக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இந்த எண்ணிக்கை ஒவ்வோர் கூட்டத்தொடருக்கும் வித்தியாசப்படுகின்றது.

**9-வது பாராளுமன்றத்தின் நூறாவது குழு அமர்வின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்கள்**

தற்போது அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினது உறுப்பினர்களின் எண்ணிக்கை 31. அந்த உறுப்பினர்களின் பெயர் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:-

- கௌரவ லசந்த அழகியவண்ண – தவிசாளர்
- கௌரவ சட்டத்தரனி மொஹான் பியதர்ஷன த சில்வா
- கௌரவ பிரசன்ன ரனவீர
- கௌரவ கே. காதர் மஸ்தான்
- கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்
- கௌரவ திருமதி டயனா கமகே
- கௌரவ சாமர சம்பத் தசநாயக்க
- கௌரவ எஸ்.பீ. திஸாநாயக்க
- கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க
- கௌரவ வஜிர அபேவர்த்தன
- கௌரவ ஏ.எல்.எம். அதாவுல்லா
- கௌரவ கபீர் ஹஷீம்
- கௌரவ மனோகனேஷன்
- கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

- கௌரவ விமலவீர திஸாநாயக்க
- கௌரவ நிரோஷன் பெரேரா
- கௌரவ ஜே.சி. அலவத்துகொட
- கௌரவ வடிவேல் சுரேஷ்
- கௌரவ அசோக் அபேசிங்க
- கௌரவ புத்திக்க பத்திரண
- கௌரவ ஜயந்த கெட்டகொட
- கௌரவ சிவஞானம் ஸ்ரீதரன்
- கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
- கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட
- கௌரவ இசுரு தொடங்கொட
- கௌரவ திருமதி ப்ரிசாந்தி
- கௌரவ எம்.டப்ளியூ.டீ. சஹன் பிரதீப்
- கௌரவ டீ. வீரசிங்க
- கௌரவ வீரசுமன வீரசிங்க
- கௌரவ மன்ஜுலா திஸாநாயக்க
- கௌரவ (கலாநிதி) ஹரினி அமரசூரிய

## 6. கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு

அரசியலமைப்பின் உறுப்புரை 153 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நியமனத்துக்கான ஏற்பாட்டை வழங்குகின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 154 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளையும் பணிகளையும் குறித்துக்காட்டுகிறது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் பணிகளுக்கு உதவ வேண்டும் என குறிப்பிடுகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும் 10 மாதங்கள் கழிய முன்னர் அவருக்கு தேவை என என அவர் கருதுகின்ற சந்தர்ப்பங்களில், அரசாங்க நிறுவனங்களின் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டு தனது கணக்காய்வு அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பார்.

குழுவின் விசாரணை விடயங்களுக்கு அடிப்படையை வழங்குவது அரசாங்க நிறுவனங்களை கணக்காய்வுக்கு உட்படுத்தி கணக்காய்வாளர் தலைமை அதிபதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் இந்த அறிக்கையாகும். எவ்வாறாயினும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கலாத ஆயினும் அரசாங்க நிதி சம்பந்தமான விடயங்களை பரிசீலிக்க குழுவுக்கு எந்த விதமான தடையும் கிடையாது.

அரசாங்க நிறுவனங்களில் குறைபாடுகள் எனக் குறிப்பிட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக் காட்டியுள்ள பிரிச்சினை விடயங்கள் கீழ்காணும் பரந்த விரிந்த பிரிவுகளினுள் வருகின்றன. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை உன்னிப்பாக ஆராய்ந்த அரசாங்க கணக்குகள் பற்றிய குழு பின்வருவனவற்றை அவதானித்தது.

1. ஒதுக்கீட்டுச் சட்டம், நிதிப் பிரமாணக்குறிப்பு மற்றும் ஏனைய கட்டளைகள், திறைசேரியின் சுற்றறிக்கைகள் மற்றும் திணைக்களங்களின் நிலையியல் கட்டளைகள் என்பவற்றுக்கு இணங்க செயற்படாமை.
2. செலவு செய்யப்படும் வளங்கள் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட பலன்கள் சமநிலையற்றதாக இருந்தமை.
3. நிறுவனங்களை தாபிக்கும் போது அந்த நிறுவனங்களின் நிமித்தம் இலக்குக்கொள்ளப்பட்ட இலக்குகள் அடையப்படாமை மற்றும் அந்த நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய கருமபணிகள் நிறைவேற்றப்படாமை.
4. அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தப்பட்டமை, சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள், அரசாங்கள் சொத்துக்கள் தகாத முறையில் பயன்படுத்தப்பட்டமை மற்றும் மோசடிகள் செய்யப்பட்டமை.

## 7. அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் உறுதிசெய்ய வேண்டிய அடிப்படை விடயங்கள்

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் தனது கரும பணிகள் நிறைவேற்றப்படும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று அடிப்படை விடயங்கள் உள்ளன.

1. பாராளுமன்றத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றவாறு நிதி செலவு செய்யப்படுதல்.
2. அரசாங்கம் நிதிகளை செலவிடும் போது சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்களை செய்யாதிருத்தல்.
3. நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் செயலாற்றுகை ஆகியவற்றின் போது அரச நெறிமுறைகளை தரமாக பேணிச்செல்லல்.

பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள், கட்டளைகள், ஏனைய சட்டஏற்பாடுகள் மற்றும் விதிகள் என்பவற்றுக்கு இணங்க நிதிகள் செலவுசெய்யப்பட்டுள்ளனவா என்பது பற்றி குழுவினால் நிர்ணயிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழு விசாரணைகளை மேற்கொண்டபோது கீழ்காணும் முக்கிய பிரிவுகளில் கவனம் செலுத்தப்படும்.

- நிகழ்ச்சித் திட்டங்களினதும் மற்றும் கருத் திட்டங்களினதும் மிகைகள்
- முற்பணக் கணக்குகளின் வரையறைகளுக்கு இணங்காமை
- அதிகாரமற்ற குழு நட்டம்
- சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டதிட்டங்கள் என்பவற்றுக்கு இணங்காமை பற்றிய கணக்காய்வு அவதானிப்பு
- செலவு செய்யப்பட்ட பணத்திற்கான பெறுமானம் பற்றிய கணக்காய்வு

## 8. அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் மேற்பார்வையின் கீழ் வரும் நிறுவனங்கள்

அண்ணளவாக 835 அரச நிறுவனங்கள் இந்தக் குழுவின் மேற்பார்வையின் கீழ் வருகின்றன (2023 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்திற்கு இணங்க)

| | |
|---|---|
| விஷேட செலவின அலகுகள் | 19 |
| அமைச்சுக்கள் | 29 |
| திணைக்களங்கள் | 102 |
| மாவட்ட செயலகங்கள் | 25 |
| மாகாண சபை நிறுவனங்கள் | |
| மாகாண சபை நிதியங்கள் | 09 |
| விஷேட செலவின அலகுகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளின் கீழ் காணப்படுகின்ற நியதிச்சட்ட சபைகள் | 310 |
| உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் | |
| மாநகர சபைகள் | 24 |
| நகர சபைகள் | 41 |
| பிரதேச சபைகள் | 276 |
| | ------ |
| மொத்தம் | 835 |
| | ------- |

முதலாவது பாராளுமன்றம் முதல் இது வரை அரசாங்க கணக்குகள் பற்றிய குழு விசாரணைக்கு உட்படுத்திய நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் சமர்ப்பித்த அறிக்கைகள் ஆகியன பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## Committee on Public Accounts – Examinations of the Institutions and Table the Committee Reports (1978 – 2023)

| Parliament | Session | Name of the Chair | Number of Institutions Investigated | Number of Reports Presented |
|---|---|---|---|---|
| First Parliament | First and Second Sessions | Hon. P.S. Soosaidasan (From 1978.09.07 to 1983.01.07 ) | 102 | 08 |
| | From Third Session to Seventh Session | Hon. W.P.B. Dissanayaka (From 1983.02.09 to 1988.01.22) | 76 | 06 |
| | Eighth Session | Hon. Chandrakumara Wijegunawardena (From 1988.02.25 to 1988.12.20 ) | 20 | 01 |
| **Total** | | | **198** | **15** |
| Second Session | From First Session to Fifth Session | Hon. E.P. Paul Perera (From 1989.03.09 to 1994.06.24) | 47 | 11 |
| **Total** | | | **47** | **11** |
| Third Parliament | First and Second Sessions | Hon. (Dr.) P.B.G. Kalugalla (From 1994.08.25 to 1996.01.12) | Not the investigations of the Institutions but the common issues | 02 |
| | Third Session | Hon. (Prof.) Vishwa Warnapala (From 1996.02.09 to 200.08.18 ) | Not the investigations of the Institutions but the common issues | 03 |
| **Total** | | | | **05** |
| Fourth Session | Second Session | Hon. Mahindananda Aluthgamage (From 2000.11.09 to 2001.10.27) | - | - |
| **Total** | | | - | - |

| Parliament | Session | Name of the Chair | Number of Institutions Investigated | Number of Reports Presented |
| --- | --- | --- | --- | --- |
| Fifth Parliament | First and Second Sessions | Hon. Anura Priyadarshana Yapa (From 2001.12.19 to 2004.02.07) | 01 | 01 |
| **Total** | | | 01 | 01 |
| Sixth Parliament | First and Second Sessions | Hon. Rauf Hakeem (From 2004.04.22 to 2008.05.06 ) | Special Report | 01 |
| | Third and Fourth Sessions | Hon. Anura Priyadarshana Yapa (From 2008.06.05 to 2010.02.09 ) | - | - |
| **Total** | | | | 01 |
| Seventh Parliament | First Session | Hon.(Dr) Sarath Amunugama (From 2010.04.22 to 2015.06.26) | 160 | 03 |
| **Total** | | | 160 | 03 |
| Eighth Parliament | First Session | Hon. Lasantha Alagiyawanna (From 2015.09.01 to 2018.04.12 ) | 113 | 04 |
| | Third Session | Hon. Lasantha Alagiyawanna (From2018.11.14 to 2019.12.02 ) | 50 | 02 |
| | Fourth Session | Hon. Lasantha Alagiyawanna (From 2020.01.03 to 2020.03.02 ) | 42 | 01 |
| **Total** | | | 205 | 07 |

| Parliament | Session | Name of the Chair | Number of Investigations investigated | Number of Reports Presented |
|---|---|---|---|---|
| Ninth Parliament | First Session | Hon. (Prof.) Tissa Vitarana (From 2020.08.20 to 2021.12.12 ) | 24 | 02 |
| | Second Session | Hon. (Prof.)Tissa Vitarana (From 2022.01.18 to 2022.07.28 ) | 8 | 01 |
| | Third Session | Hon. Kabir Hashim (From 2022.08.03 to 2023.01.27 ) | 15 | 02 |
| | Fourth Session | Hon. Lasantha Alagiyawanna (From 2023.02.08 until now) | 43 (Including 07 Special Audit Reports) | 01 |
| **Total** | | | 90 | 06 |

## Committee on Public Accounts –

## Reports Tabled on the Evaluation of Public Institutions based on the Information Management System

| Parliament | Sessions | Name of the Chair | Financial Year and Tabled Date | Number of institutions evaluated |
|---|---|---|---|---|
| Eighth Parliament | First Session | Hon. Lasantha Alagiyawanna | 2015<br>2017.11.13 | 831 |
| | Second Session | Hon. Lasantha Alagiyawanna | 2016<br>2018.06.19 | 837 |
| | Third Session | Hon. Lasantha Alagiyawanna | 2017<br>2019.06.21 | 838 |
| | Fourth Session | Hon. Lasantha Alagiyawanna | 2018<br>2020.02.18 | 844 |
| Ninth Parliament | First Session | Hon. (Prof.) Tissa Vitarana | 2019<br>2021.10.07 | 833 |
| | Second Session | Hon. Kabir Hashim | 2020<br>2022.12.05 | 827 |

வருடாந்தம் குழு அதன் முன்னிலையில் நிறுவனங்களை அழைத்து விசாரணை செய்யக்கூடிய எண்ணிக்கை மிகவும் குறைந்தது என்பது மேற்குறித்த அட்டவணையில் இருந்து தெளிவாகுகின்றது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தகவல் முகாமைத்துவ முறைமையை பயன்படுத்தி சகல அரச நிறுவனங்களையும் வருடாந்தம் விசாரணை செய்ய அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் முடிந்துள்ளது. எடுக்கக்கூடிய காலம் வரையறுக்கப்பட்டுள்ளதால் பாரம்பரிய முறையியலான குழுவின் முன்னிலையில் அழைப்பதன் மூலம் சகல அரச நிறுவனங்களையும் விசாரணைக்கு உட்படுத்த முடியாமல் போவதற்கு இது வெற்றிகரமான ஒரு தீர்வாக அமைந்தது.

அத்துடன் கொவிட் தொற்று நிலவிய காலத்தில் குறித்த மதிப்பீட்டினை தொடர்ந்து நடாத்தும் இயலுமை இருந்ததுடன் அது நிகழ்நிலை மதிப்பீட்டு முறைமையின் பெறுமதியையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டும் சிறந்த சந்தர்ப்பமாகவிருந்தது.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் (COPA) முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) அங்குரார்ப்பணம் செய்வதற்கு முன்னர், அதன் செயற்பாடு பற்றி அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண சபைகளின் தலைவர்கள், மற்றும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர்களுக்கு விழிப்பூட்டுவதற்காக அவர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளுக்காக பல பயிற்சிப் பட்டறைகளை அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (COPA) ஏற்பாடு செய்தது.

- COPA MIS (முகாமைத்துவ தகவல் முறைமை) வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் அரச நிறுவனங்களின் நிதிசார் ஒழுக்கத்தில் கவனிக்கத்தக்க மேம்பாட்டைக் காணமுடிந்தது.

  உதாரணம்: COPA MIS ஊடாக பரிசீலிக்கப்பட்ட அனைத்து அரசாங்க நிறுவனங்களினதும் ஒட்டுமொத்த நிதிக் கட்டுப்பாட்டு மேம்பாடு மற்றும் செயலாற்றுகை வழிகாட்டல்களுடன் இணங்கியொழுகுதல் ஆகியவற்றின் சதவீதம் பின்வருமாறு:

  கணக்கீட்டு வருடம் 2015 - 64%

  கணக்கீட்டு வருடம் 2016 - 71%

  கணக்கீட்டு வருடம் 2017 - 80%

  கணக்கீட்டு வருடம் 2018 - 78%

  கணக்கீட்டு வருடம் 2019 –82%

  கணக்கீட்டு வருடம் 2020 - 80% (பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்துள்ள அறிக்கைக்கு ஏற்ப)

2015 ஆம் ஆண்டின்போதிருந்த மொத்த 840 அரச நிறுவனங்களில் நிதி மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகை தொடர்பில் 50 புள்ளிகளுக்குக் குறைவான செயற்றிறனைக் காட்டிய அரச

நிறுவனங்களின் எண்ணிக்கை 111 ஆக இருந்ததுடன் குறித்த எண்ணிக்கையை 2021 ஆம் ஆண்டின்போது ஒரு (01) நிறுவனமாக குறைப்பதற்கு இயலுமானது.

2015 ஆம் ஆண்டில் 90% மேல் மதிப்பீட்டுப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 58 நிறுவனங்கள் அதாவது 7% காட்டிய நிறுவனங்களின் எண்ணிக்கை 2021 ஆண்டின்போது 329 ஆகும். அதாவது 37.1% வரையான அதிக மட்டத்தை எட்டியுள்ளது.

நாளடைவில் அதாவது 2018 ஆம் நிதி ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையில் 2021 ஆம் ஆண்டில் 191 நிறுவனங்களும் அதாவது 18.3% எண்ணிக்கை 90 இற்கு அதிகமான செயலாற்றுகை மட்டத்தை காட்டுதல் எதிர்வரும் காலத்தில் செயலாற்றுகை தரவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான உந்துதல் ஆகும்.

மிகவும் பயனுள்ள தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமையை பயன்படுத்தி அரசாங்க வருமானத்தை சேகரிப்பதை அதிகரிக்கும் முகமாக அந்த செயல்முறையுடன் தொடர்புடைய பிரதான தரப்புகளான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கலால் வரித் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களம் என்பன அடங்கலாக 17 அரச நிறுவனங்களினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய சிபாரிசுகளை முன்வைப்பதற்கு ஒரு விஷேட குழு அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் நியமிக்கப்பட்டது.

குறித்த உப குழுவின் சிபாரிசுகளை செயற்படுத்துவதற்காக பிரதம அமைச்சரின் செயலாளரின் தலைமையிலும் ஏனைய வருமானம் ஈட்டிவரும் சம்பந்தப்பட்ட 13 நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் அடிப்படை தொழில்நுட்பக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அது வெற்றிகரமாக இயங்கிவருகின்றது. சனாதிபதி செயலகம், நிதி , பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொலைதொடர்புகள் முகவராண்மை இக் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) முறைமைகளை பயன்படுத்தி நாட்டின் வருவாய் ஈட்டும் பிரதான நிறுவனங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியவற்றின் மூலம் சேகரிக்கப்படும் அரசிறையை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக குழுவால் வழங்கப்பட்ட சிபாரிசுகளை பாராளுமன்றத்தில் அது பற்றி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை உள்ளடக்கியிருந்தது.

2023 ஆம் ஆண்டில் 48 விசேட கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பிலான அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அமைச்சுகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது. குறித்த விசேட கண்காய்வு அறிக்கைகளை ஆராய்வதற்கு அமைச்சின் மட்டத்தில் குழுவென்றை நியமிப்பதற்கு

ஆலோசனைகள் வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கை குழுவிற்கு கோரப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை எதிரில் ஆராயப்படவுள்ளது.

அரச நிறுவனங்களால் அதிக அளவான பணம் அவற்றின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை தேவையற்ற தகவல்களுடன் சேர்த்து தயாரிப்பதற்கு செலவிடப்படுவதை குழு அவதானித்ததால் COPA இன் அறிவுறுத்தலுக்கு அமைய அரச நிதித் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட பொதுவான ஒரு மாதிரிக்கு இணங்கியொழுகி அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் அவற்றின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை தயாரிக்குமாறு அறிவுறுத்தி அரச நிதித் திணைக்களத்தால் 2020.01.30 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

*அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் கட்டளைகளை செயற்படுத்தல்*

*பாராளுமன்றத்தின் திருத்திய நிலையியல் கட்டளை இலக்கம் 119 (4)*

(4) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் அல்லது அச் சிபாரிசுகள் நிறைவுசெய்யப்படலாகாது என்பது அமைச்சரின் கருத்தானால் அரசாங்க நிதியை முறையாக கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகள் பற்றிய காரணங்கள் எழுத்துமூலம் விளக்கமளிக்கப்பட வேண்டும். குழுவிற்கு தேவையாயின் விளக்கமளிப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். குழு அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்.

- **அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல்**

பாராளுமன்றத்தின் திருத்தப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) மூலம் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தலானது பின்வருமாறு முன்னரிலும் பார்க்க வலுவூட்டப்பட்டுள்ளது.

**(நிலையியற் கட்டளை 119(4)- “அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ்வறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம்**

**அவதானிப்புக்களையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் <u>எட்டு வார காலப்பகுதியினுள் பா</u>ராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டியுள்ளமை.**

***குறித்த அவதானிப்புக்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை முறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச்சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால், அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளிக்க வேண்டியுள்ளமை.***

***குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவுக்குத் தனிப்பட்ட ரீதியில் அமைக்க முடியுமாகவுள்ளமை.***

***அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டியுள்ளமை.***
***பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கபடலாமென்பது***

- அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு சமர்ப்பித்த அறிக்கைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 119(4)இன் பிரகாரம் ***நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள்*** சமர்ப்பித்த அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்காக அவருக்கு ஆற்றுப்படுத்தப்படும் புதிய பொறிமுறையொன்று 8 ஆவது பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டது. இது குழுவின் பின்தொடர்தல் செயல்முறையை வலுப்படுத்தியது.

- 9 ஆவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரிலிருந்து, ஸூம் தொழில்நுட்பம் மூலம் சில விசாரணைகள் தொடங்கப்பட்டன. உதாரணமாக, ஊவா மாகாண சபை, கிழக்கு மாகாண சபை மற்றும் சப்ரகமுவ மாகாண சபை ஆகியவை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு விசாரணைப் பணிக்காக அழைக்கப்பட்டபோது, அந்த மாகாண சபைகளின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களையும் ஸூம் தொழில்நுட்பத்தின் மூலம் தொடர்பு கொண்டு, அந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய முக்கியமான கணக்காய்வு விவகாரங்கள் குறித்தும் கேள்விகள் கேட்கப்பட்டன.

- மேலும், விசாரணைகளுக்கு முக்கியமான, தொலைதூர நிறுவனங்களின் அதிகாரிகளும் ஸூம் தொழில்நுட்பம் மூலம் விசாரணைகளில் பங்கேற்கின்றனர்.(உதாரணம்: நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது மாகாண நன்னடத்தை ஆணையாளர்கள் உள்ளடங்கலாக ஏனைய நிறுவன அதிகாரிகளும் இவ்வாறு தொடர்புகொள்ளப்பட்டனர்.)

- அழைக்கப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கூட்ட நிகழ்ச்சி நிரலைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் வெளியிட முடிவு செய்த பின்னர், பொதுமக்கள் தங்கள் கருத்துகள், பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகளை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் மின்னஞ்சல், தொலைநகல் அல்லது தபால் மூலம் அனுப்ப வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

- குழு கூட்டங்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துதல்

  எட்டாவது பாராளுமன்றத்தில், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளரும், அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளரும் பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகரிடம் சமர்ப்பித்த ஒரு கூட்டுப் பிரேரணை மூலம் குழுக் கூட்டங்களை நேரடியாக ஒளிபரப்புவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்தனர். அதன் படி, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 14 மூலம் அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இந்தப் புதிய நடவடிக்கைகளின் மூலம், வெளிப்படைத் தன்மையைப் பேணவும், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்றம் உட்பட அனைத்து அரச நிறுவனங்களுக்கிடையில் இருக்கும் இடைவெளியைக் குறைக்கவும் குழுவால் முடிந்தது. அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கொள்கைகளில் இன்றியமையாத அம்சமாக இருக்கும் அரசாங்க நிதிச் செயற்பாடுகளை வெற்றிகரமாக நிர்வகிப்பதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வினைத்திறன்மிக்க செயற்பாடு பேருதவியாக உள்ளது.